உ

சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்~07 விசுவாசுவ வருடம் தைத் திங்கள் தை ~2026 பூமி~01



# குளங்களை தூர்வாரும் பொறுப்பை அந்த அந்த கிராம மட்டங்களில் பொது அமைப்புகளிடம் கையளியுங்கள்

நம் முன்னோர்கள் பல குளங்களை அமைத்தார்கள். குளத்துக்கு நீர் செல்வதற்கான வாய்க்கால்களை அமைத்தார்கள். இறந்தவர்களின் நினைவாக பல கேணிகளை அமைத்தார்கள். ஆலயங்களில் இருக்கின்ற கேணிகள் ஆலயத்தை விட மிகப்பெரியதாக அமைக்கப்பட்டன. அதற்குக் காரணம் மூத்தோரிடமிருந்த இயற்கை பற்றிய நம்பிக்கையும் இயற்கை தந்த கொடையாக மழை வெள்ளத்தை நன்மைக்கு பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வும் தான்.



இன்று இந் நிலை மாற்றம் பெற்றுள்ளது. பல குளங்கள் தூர்ந்து போய் விட்டன பல குளங்கள் மூடப்பட்டுவிட்டது. கேணிகள் பல இடங்களிளே மூடப்பட்டு விட்டன. இதனால் குறிப்பாக வடக்கில் யாழ்ப்பாணத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பது வழக்கமாகிவிட்டது. நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சமீபமாக பிராமணக்கட்டு குளம் என்றொரு குளம் இருக்கின்றது.

ஒரு காலத்தில் தமிழ் வேந்தர்கள் பிராமணர்கள் காலையிலே அனுட்டானம் பார்த்து மந்திரங்கள் சொல்லி நீராடுவதற்காக நல்லூர் அக்ரஹாரத்தில் இந்தக் குளம் அமைக்கப்பட்டது. இன்று இந்தக் குளம் கழிவு குளமாக மாறிவிட்டது. அந்தக் குளம் நிரம்பினால் அதிலிருந்து ஆரிய குளத்திற்கு தண்ணீர் சென்று ஆரியகுளம் நிரம்பிய பின்பு புல்லுக்குளம் வாயிலாக மித மிஞ்சிய நீர் மட்டும் கடலுக்கு செல்வது வழக்கம். ஆங்கிலேயருடைய காலத்திலும் இந்த பிராமணக் கட்டுக்குளம், புல்லுக்குளம் மற்றும் ஆரியகுளம் தொடர்பாக நிறைந்த இடைத்தொடர்புகள் இருந்திருக்கின்றன.



ஆரிய குளம் என்பது ஆரிய சக்கரவர்த்தி காலத்து குளம் என்பதாகும். பரராஜசேகர மாமன்னன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட குளம் என்று இலக்கியங்களில் கூறப்படுகின்றது. ஈழத்துப்புலவர் சரிதத்தை எழுதிய குமார சுவாமிப் புலவர் இந்த ஆரிய குளம் பற்றிய செய்தியை ஒரு புலவர் குறிப்பிட்டுள்ளதாக வெளிப்படுத்தி இருக்கின்றார். எனவே இந்த குளங்கள் யாவும் இன்று தூய்மை செய்யப்பட்டு கடலுக்குப் போகின்ற நீர் தங்கிச்செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். வெள்ளத்தினால் வருகின்ற ஆபத்திலிருந்து சமூகத்தை காப்பதற்கு இந்தக் குளங்கள் யாவும் புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.

இந்தக் குளங்களின் பராமரிப்பை அந்தப் பகுதியில் இருக்கின்ற பொதுமக்களுடைய அமைப்புக்கள் பரிபாலணம் செய்ய வேண்டும். பல திணைக்களங்கள் குளங்களை பரிபாலனம் செய்வதாக சொல்லி சீராக இயங்குவதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற கிராம முன்னேற்ற அமைப்புக்களை மீண்டும் புத்துயிர் கொடுத்து அந்தக் கிராமத்து மக்களிடம் இந்தக் குளங்களை, வாய்க்கால்களை, கேணிகளை ஒப்படைத்தால் அவர்கள் உரிமையோடு பாதுகாப்பார்கள். அவர்களது தேவையான நிதி உதவியை திணைக்களங்கள் செய்தால் பயன் அதிகம் கிடைக்கும். இல்லை என்றால் ஆண்டு தோறும் வெள்ள நிவாரணம் பற்றிய பேச்சு இடம்பெறுமே ஒழிய வெள்ளம் தேங்காது மாற்று வலியை கண்டுபிடிக்காது நாம் தொடர்வோமே ஆனால் எல்லாமே பழம் கதையாக இருக்கும்

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் பக்திபூர்வமாக இடம்பெற்ற வருடாந்த திருவாசக முற்றோதல்



யாழ்ப்பாணம் நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் வருடாந்தம் நடைபெறும் திருவாசக முற்றோதல் நிகழ்வு கடந்த 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மிக பக்திபூர்வமாகவும் நடைபெற்றது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த சிவபக்தர்கள் மற்றும் அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாணிக்கவாசகப் பெருமானின் அருட் செயல்களைப் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வு, நாவற்குழிப் பிரதேசத்தில் ஒரு தெய்வீகச் சூழலை ஏற்படுத்தியிருந்தது. முற்றோதலின் நிறைவில் விசேட பூஜைகளும், கலந்து கொண்ட அடியார்களுக்கான அன்னதானமும் வழங்கப்பட்டன.

வருடாந்தம் நடைபெறும் இந்த முற்றோதல் நிகழ்வானது, இளைய தலைமுறையினரிடையே திருவாசகத்தின் மேன்மையை கொண்டு செல்லும் ஒரு உன்னதமான நோக்குடன் இம்முறையும் வெற்றிகரமாக அமைந்திருந்தது.





# துரித உணவுப் பாவனையால் பாதிக்கப்படும் மாணவர்களது ஆரோக்கியம்



அரசு பாடசாலை மாணவர்கள் குறைந்த விலையில் ஊட்டச்சத்து குறைந்த சிற்றுண்டிகளை அதிகமாக உட்கொள்வதாகத் தெரியவந்துள்ளது. ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த 463 மாணவர்களிடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அரசு பாடசாலை மாணவர்கள் குறைந்த விலையில் கொள்ளளவு கூடிய போசனை குறைந்த உணவை உட்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. அதேநேரம் காய்கறிகள், கீரைகள் மற்றும் தானியங்களின் தினசரி நுகர்வு குறைவாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இளம் பருவத்தினரின் துரித உணவு, சிற்றுண்டி மற்றும் சர்க்கரை பானங்களின் நுகர்வு அதிகரிப்பைக் காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.




அரசு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை விட உடல் ரீதியாகக் குறைவான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலதிக வகுப்புக்கள் மற்றும் பரபரப்பான கால அட்டவணைகள் இதற்கு முக்கிய காரணிகளாக அமைவதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உணவுப் பழக்க வழக்கங்கள் குறித்துக் குறைவாகவே அக்கறை செலுத்துவதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதிய பேராசிரியர்களுக்கு வாழ்த்துகள்





யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் பேராசிரியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சட்ட வைத்தியத்துறைக்குச் சுமார் 30 வருடங்களுக்குப் பின்னர் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு மைல்கல்லாகும்.

அதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாக கல்வி, ஆய்வு மற்றும் நிர்வாகத் துறைகளில் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வந்த கலாநிதி சுகன்யா அரவிந்தன் மற்றும் கலாநிதி சி.ராஜ்உமேஷ் ஆகியோருக்கும் பல்கலைக்கழகப் பேரவை பேராசிரியர் பதவி உயர்வினை வழங்கி கௌரவித்துள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இவர்கள் வெளிப்படுத்திய திறமை மற்றும் தொடர்ச்சியான முயற்சிகளுக்கான அங்கீகாரமாகவே இந்தப் பதவி உயர்வுகள் அமைந்துள்ளன. தமது துறைகளில் உயரிய சாதனைகளைப் படைத்து, பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கும் இந்தப் புதிய பேராசிரியர்களுக்குப் பலரும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# சக பாடசாலை மாணவர்களின் கல்விக்கு உதவும் யாழ். இந்துக் கல்லூரி



வடக்கு மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப மற்றும் வள ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இணையவழி கற்றல் செயற்பாடுகள் தொடர்பான விசேட மீளாய்வுக் கலந்துரையாடல் 30.12.2025 மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆளுநர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் இ.செந்தில்மாறன் அவர்களின் தன்னார்வ முயற்சியால், ஆரம்பத்தில் தீவக வலயத்தின் ஒரு சில பாடசாலைகளுக்காகத் தொடங்கப்பட்ட இத்திட்டம், பின்னர் மாகாணம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார். இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது 151 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று வந்த நிலையில், அண்மையில் ஏற்பட்ட “டித்வா“ பேரிடர்ச் சூழலுக்குப் பின்னர் மாணவர்களின் பங்குபற்றலில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. தற்போது அந்த நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், ஆரம்பக்கால எண்ணிக்கையை மீண்டும் எட்ட வேண்டியது அவசியமாகும் என அவர் வலியுறுத்தினார்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஒவ்வொரு வலயத்திலும் காணப்படும் சவால்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, இணைய வசதிகள் இன்மை மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்கள் பிரதான தடையாக உள்ளமை ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதற்குப்

பதிலளித்த ஆளுநர், இணைய வசதியற்ற பாடசாலைகளின் விவரங்கள் கிடைக்கப்பெற்றதும், ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக அவற்றுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். அத்துடன், தீவக வலயத்தைப் போன்று ஏனைய கல்வி வலயங்களும் தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.



இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர், பேரிடரினால் பாதிக்கப்பட்ட 221 மாணவர்களுக்கு தலா 3,500 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மூன்று பாடசாலைகளுக்கு பல்லூடக எறிவிகள் (Projectors) அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், இணைய வசதி அறவே இல்லாத பிரதேசங்களில் உள்ள மாணவர்களை ஒரு மையப் பாடசாலையில் ஒன்றிணைக்க முடியுமாயின், அப்பாடசாலைக்குச் செய்மதி ஊடான இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவும் யாழ். இந்துக் கல்லூரித் தரப்பு தயாராக உள்ளதாக அவர் உறுதியளித்தார்.

மாணவர்களின் கல்வி இடைவிலகலைத் தடுக்கும் நோக்கில், பாடசாலைக்குத் தொடர்ச்சியாகச் சமுகமளிக்காத மாணவர்கள் தொடர்பில் அதிபர்கள் அல்லது வலயக் கல்விப் பணிமனைகள் ஊடாக அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கோ அல்லது பொலிஸ் நிலையங்களுக்கோ அறிவிக்கும் பொறிமுறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஆளுநர் இதன்போது பணிப்புரை விடுத்தார்.

பேரிடர் காலத்திலும் மாணவர்களின் நலன் கருதி நிவாரணப் பணிகளை முன்னெடுத்தமைக்காக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபருக்கு ஆளுநரால் விசேட பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர், 13 கல்வி வலயங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# சிவபூமி முதியோர் இல்லத்தில் பக்தி பூர்வமாக இடம்பெற்ற திருவெம்பாவை பூசைகள்



ஈழத்தின் ஆன்மீகச் செழுமை மிக்க தொல்புரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லம், ஆதரவற்ற முதியவர்களுக்குப் புகலிடமாக இருப்பதுடன் அவர்களின் ஆன்மீகத் தேடலுக்கான ஒரு சிறந்த தளமாகவும் விளங்குகின்றது. இந்த இல்லத்தில் அமைந்துள்ள ஆலயத்தில், மார்கழி மாதத்திற்குரிய புனிதமான திருவெம்பாவை பூசை வழிபாடுகள் இவ்வாண்டு மிகவும் பக்தி பூர்வமாகவும் நெகிழ்ச்சியாகவும் நடைபெற்றன.

குளிரும் பனியும் நிறைந்த மார்கழி மாதத்தின் அதிகாலை வேளையிலும், இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள் மிகுந்த உடல் ஆரோக்கியத்தோடும் மன ஊக்கத்தோடும் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டமை அனைவரையும் நெகிழச் செய்தது. அதிகாலையிலேயே துயில் எழுந்து, நீராடி, தூய மனதுடன் ஆலயத்திற்கு வருகை தந்த அவர்கள், மாணிக்கவாசகப் பெருமானின் திருவெம்பாவை பாடல்களை ஒருமித்த குரலில் இசைத்து ஈசனை வழிபட்டனர். இளமைக்கால நினைவுகளையும் இறைவனின் திருவடி நிழலையும் எண்ணி உருகிய அவர்களின் பக்திப் பாடல்கள் அந்தப் பகுதியையே சிவலோகமாக மாற்றியது.



உலகியலில் இருந்து விடுபட்டு, இறைச் சிந்தனையோடு தங்களது அந்திமக் காலத்தைக் கழிக்கும் இந்த முதியவர்களின் ஆன்மீக ஆர்வம், இளைய தலைமுறைக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது. ஆலய பூசகரின் நெறியாள்கையில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளும், அதன் பின்னர் வழங்கப்பட்ட பிரசாதங்களும் அங்கே ஒரு தெய்வீகக் குடும்பச் சூழலை உருவாக்கியிருந்தன. இத்தகு ஆன்மீக நிகழ்வுகள் முதியவர்களின் மன அழுத்தத்தைப் போக்கி, அவர்களுக்கு ஒருவிதமான அமைதியையும் வாழ்வின் மீதான பிடிப்பையும் அளிக்கும் என்பது திண்ணம்.

# பெண்கள் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்தில் சத்துணவு உணவுச் சாலை திறந்து வைக்கப்பட்டது



சிவபூமி அறக்கட்டளை, லண்டன் அபயம் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஊடாக முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கி வரும் பெண்கள் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்தில் ஒரு புதிய மைல்கல்லாகச் சத்துணவு உணவுச் சாலை 05.01.2025 அன்று உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை மற்றும் லண்டன் அபயம் அறக்கட்டளை ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் கருவளச் சிகிச்சை நிலையத்துடன் இணைந்து இப்புதிய உணவுச் சாலை செயற்படவுள்ளது.

இந்தப் பாரிய கூட்டு முயற்சியின் கீழ் இயங்கும் கருவளச் சிகிச்சை நிலையத்தின் மூலம் ஏற்கனவே இப்பிராந்தியத்தைச் சேர்ந்த ஏராளமானோர் பயன் பெற்று வரும் நிலையில், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சத்துணவு நிலையமானது சிகிச்சைக்காக வருகை தரும் பெண்களின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



குறிப்பாக, சிகிச்சைக்காக வரும் பெண்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் நிறை உணவை உட்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துவதும், சரியான ஊட்டச்சத்து முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

மருத்துவ சிகிச்சைகளுக்கு இணையாகச் சரியான உணவு முறையும் ஒருவரின் உடல் நலத்தை மேம்படுத்தும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இந்த உணவுச் சாலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

தூர இடங்களில் இருந்து சிகிச்சைக்காக வரும் பெண்களுக்குத் தரமான மற்றும் சத்தான உணவு நிலையத்திலேயே இலகுவாகக் கிடைப்பதை உறுதி செய்வதோடு, சமூகத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு இது ஒரு சிறந்த முன்மாதிரியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.







# நாவற்குழியில் பொழிந்த திருவாசகத் தேன் மழை



யாழ்ப்பாணம் நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையில், சிவபூமி அறக்கட்டளையின் நேர்த்தியான ஏற்பாட்டில் ”திருவாசக விழா - 2026” நிகழ்வானது கடந்த 03.01.2026 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் மிகவும் எழுச்சியுடனும் பக்திப் பரவசத்துடனும் நடைபெற்றது.

மகிமை மிக்க மார்கழி மாதத்தில் மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தின் சிறப்பைப் போற்றும் வகையில் அமைந்த இந்நிகழ்வு, செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் இனிதே ஆரம்பமானது. இவ்விழாவிற்கு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரிலிருந்து வருகை தந்த இதய வைத்திய நிபுணர் வை. மனோமோகன் மற்றும் வைத்திய நிபுணர் மனோமோகன் அரவிந்த் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருவாசக அர்ப்பண நிகழ்வுகளில் சிட்னியிலிருந்து வருகை தந்த வைத்தியகலாநிதி சிவரதி கேதீஸ்வரன், மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் இணைந்து தேனிலும் இனிய திருவாசகத்தை பாடினர். அதேபோல இசை ஆசிரியர் திருமதி புஂபலட்சுமி உமாசங்கர், விரிவுரையாளர் திரு. குகேந்திரன் அனுஂன், செல்வி தர்மிதா ஆனந்தரத்தினம் ஆகியோர் இணைந்து திருவாசகப் பாடல்களை இனிமையாக பாடினார்கள்.



அத்துடன், உடுவில் நாட்டிய கலாநேந்திரா மாணவர்களால் வழங்கப்பட்ட திருவாசக நாட்டிய அர்ப்பணமானது காண்போரைக் கவரும் வகையில் அமைந்திருந்தது.

இந்த ஆன்மீகச் சங்கமத்தைக் காண்பதற்கும் திருவாசகத் தேனைப் பருகுவதற்கும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் திரண்டு வந்து கலந்துகொண்டமை விழாவிற்கு மகுடம் சூட்டுவது போல் அமைந்தது. சிவபூமி குடும்பத்தினரின் அர்ப்பணிப்பான உழைப்பினால் இந்த விழா ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகப் பதிவாகியுள்ளது.








# கவுந்தியடிகளின் அறச்சீற்றம்



சிலப்பதிகாரத்தில் வரும் மிகச் சுவாரசியமான மற்றும் உணர்ச்சிகரமான ஒரு பகுதி, கோவலன் - கண்ணகி மதுரையை நோக்கிப் பயணம் செய்தபோது நடந்த ”வம்பப் பரத்தையர் கதை” மற்றும் அந்தப் பயணத்தின் ஊடே வெளிப்படும் அறநெறிகளாகும். இந்தப் பகுதி சிலப்பதிகாரத்தின் “மதுரைக் காண்டத்தில்“ இடம்பெறுகிறது.

கோவலன் தன் செல்வம் முழுவதையும் இழந்து, கடைசியில் கண்ணகியின் காற்சிலம்பை விற்பதற்காக மதுரைக்குச் செல்ல முடிவெடுக்கிறான். இந்தப் பயணத்தில் அவர்களுக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் வந்தவர் சமணத் துறவியான

கவுந்தியடிகள். பூம்புகாரில் இருந்து மதுரை வரையிலான அந்த நீண்ட பயணம், வெறும் நடைபயணம் மட்டுமல்ல் அது கோவலனின் மனமாற்றத்திற்கும், கண்ணகியின் பொறுமைக்கும் சான்றாக அமைந்தது.பயணத்தின் ஒரு கட்டத்தில், காவிரி ஆற்றைக் கடந்து அவர்கள் ஒரு சோலையில் தங்கியிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒரு ஆணும் பெண்ணும் (இவர்கள் வம்பப் பரத்தையர் என்று அழைக்கப்படுகின்றனர்), மர நிழலில் அமர்ந்திருந்த கோவலனையும் கண்ணகியையும் பார்த்து ஏளனமாகச் சிரிக்கத் தொடங்கினர். அவர்கள் கவுந்தியடிகளிடம் சென்று, ”தவக்கோலம் பூண்ட உங்களோடு வந்திருக்கும் இந்த ஆணும் பெண்ணும் யார்? இவர்கள் ஒருவருக்கொருவர் என்ன உறவு?” என்று நையாண்டியாகக் கேட்டனர்.கவுந்தியடிகள் மிகவும் அமைதியாக, ”இவர்கள் இருவரும் கணவன் - மனைவி” என்று பதிலளித்தார். இதைக் கேட்ட அந்த வம்பப் பரத்தையர், ”என்ன விந்தை இது! அண்ணனும் தம்பியும் உடன் பிறப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், அண்ணனும் தங்கையும் மணம் புரிந்து கொள்வது இந்தப் பகுதியில் வழக்கமோ?” என்று மிகவும் இழிவாகவும் கேலியாகவும் பேசினர். அதாவது, ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றாகச் செல்வதைக் கண்டாலே அவர்களைக் கேலி செய்யும் நோக்கம் அவர்களிடம் இருந்தது. கண்ணகி இதைக் கேட்டு மிகுந்த மனவேதனை அடைந்தாள். தன் கணவனைப் பற்றி இழிவாகப் பேசியதைக் கேட்டுத் துடித்தாள். துறவியான கவுந்தியடிகளுக்குக் கோபம் வந்தது. தவ வலிமை மிக்க அவர், ”அறியாமையினால் அறம் தவறிப் பேசிய நீங்கள் இருவரும் காட்டில் அலையும் நரிகளாக மாறக்கடவது!” என்று சாபமிட்டார். அடுத்த கணமே, அந்த இருவரும் நரிகளாக மாறி ஊளையிடத் தொடங்கினர்.இந்தச் சம்பவம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. தண்டனை கிடைத்தவுடன் கோவலனும் கண்ணகியும் பதறிப்போயினர். ”அடிகளே! அவர்கள் அறியாமல் செய்த பிழையை மன்னித்து அவர்களுக்குச் சாப விமோசனம் அளிக்க வேண்டும்” என்று கவுந்தியடிகளிடம் மண்டியிட்டு வேண்டினர். துறவியாக இருந்தாலும், தவறு செய்பவர்களைத் தண்டிக்கத் தயங்காத பெரும் துயரத்தைக் குறிக்கும் அறிகுறியாகும்.

அதே வேளையில், கோவலன் மற்றும் கண்ணகியின் இரக்க குணத்தைக் கண்டு கவுந்தியடிகள் மனம் இரங்கினார். ”இவர்கள் ஓராண்டு காலம் நரிகளாக அலைந்து திரிந்து, பின்னர் மீண்டும் பழைய உருவம் பெறுவார்கள்” என்று சாபத்தைக் குறைத்தார்.

இந்தக் கதை சிலப்பதிகாரத்தில் ஏன் மிக முக்கியமானது என்றால், இது கோவலனின் குணமாற்றத்தைக் காட்டுகிறது. முன்பு மாதவியின் பின்னால் சென்று அறம் மறந்த கோவலன், இப்போது மற்றவர்களுக்காகப் பரிந்து பேசும் பண்புள்ளவனாக மாறுகிறான். அதேபோல், கண்ணகியின் கற்புத் திறத்தையும், அவளுக்கு நேர்ந்த அவமானத்தையும் இளங்கோவடிகள் இதன் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார்.

மேலும், இப்பயணத்தில் மதுரையை நெருங்கும் போது, தீய நிமித்தங்கள் தோன்றுவதை இளங்கோவடிகள் விவரிப்பார். கண்ணகியின் இடக்கண் துடித்தது, இது வரப்போகும்

ஆனால், அவர்கள் அதை உணராமல் மதுரைக்குள் நுழைந்தனர். ஒரு இன்பமான பயணமாகத் தொடங்கி, இறுதியில் ஒரு மாபெரும் சோகத்தில் முடியப்போகும் காப்பியத்தின் திருப்புமுனையாக இந்தப் பயணம் அமைகிறது.

தவறு செய்பவர்களுக்குத் தண்டனை உண்டு என்பதும், அதே சமயம் மன்னிக்கும் பண்பு உயர்ந்தது என்பதும் இக்கதையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

கவுந்தியடிகளின் வழிகாட்டுதலும், அந்தப் பயணத்தில் அவர்கள் சந்தித்த மனிதர்களும், இயற்கைச் சூழலும் சிலப்பதிகாரத்தை ஒரு சாதாரணக் கதையாக அல்லாமல், வாழ்வியலை விளக்கும் ஒரு உன்னதக் காப்பியமாக மாற்றுகின்றன.

# சிறப்பாக நடைபெற்ற சிவத்தமிழ்ச் செல்வியின் 101 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா




ஈழத்துச் சைவப் புலத்தில் ஆன்மீகச் சுடராகவும் சமூகச் சீர் திருத் தவாதியாகவும் வாழ்ந்து மறைந்த சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 101-வது பிறந்தநாள் மற்றும் அறக்கொடை விழா, 2026 ஜனவரி 7ஆம் நாள் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்க ஓர் அவதாரமாகத் தோன்றிய அன்னையார், 1925ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் நாள் அப்பாக்குட்டி தம்பதிகளின் இல்லறம் பெருமைபெறப் பெண்மகவாக அவதரித்தார். அம்பாள் அருளோடு பிறந்த அந்தத் தங்க நிறத்து மகளுக்குத் “தங்கம்மா“ என்று பெற்றோர் நாமம் சூட்டினர். அறமும் ஆன்மீகமுமே தனது வாழ்வின் உயிர் மூச்சு என்ற உயரிய சிந்தனையோடு, எண்ணற்ற மனித உயிர்களின் வாழ்விற்கு நல்வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் எங்கள் அன்னை.

ஒவ்வொரு ஆண்டும் அன்னையாரின் பிறந்தநாளில் சமூகத்திற்கும் சமயத்திற்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய சான்றோர்களைக் கௌரவிப்பது வழக்கமாகும். அந்த வகையில் இந்த ஆண்டு, வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் கலாநிதி சமாதிலிங்கம் சத்தியசீலன், மிருதங்க வித்துவான் மாரிமுத்து சிதம்பரநாதன், இளைப்பாறிய அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், இளைப்பாறிய கூட்டுறவு மாவட்ட உதவி ஆணையாளர் திரு. எல்லுப்போலை சின்னத்தம்பி மற்றும் தவில் வித்துவான்



சுருளிச்சாமி இராமதாஸ் ஆகிய ஐவருக்கும் சிவத்தமிழ்செல்வி அறநிதியச் சபை சார்பில் மிக உயரிய விருதான “சிவத்தமிழ் விருது“ வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தச் சிறப்பான நிகழ்வில், வைத்திய கலாநிதி சி. ரகுராமன் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும், விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா தம்பதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு விழாவிற்குப் பெருமை சேர்த்தனர். ஆலயப் பிரதம குருக்களும், ஆன்மீகச் சுடர் தெண்டுநாத சுவாமி அவர்களும் ஆசிச் செய்திகளை வழங்கினர். விழாவின் முக்கிய அங்கமாக, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கும் தெல்லிப்பழை கோட்டத்தில் உள்ள உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும் தாராளமாக அறக்கொடைகள் வழங்கப்பட்டன. பெருமளவிலான அன்பர்கள் மற்றும் அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்த இவ்விழா, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் காட்டிய அறநெறியும் சைவத் தமிழும் என்றும் நிலைபெற்று நிற்கும் என்பதை உறுதிப்படுத்தியது.









# வாழ்வை மேன்மைபாபடுத்தும் தைப்பூச விரதம்



தைப்பூசம் என்பது உலகெங்கும் வாழும் தமிழர்களால் மிகுந்த பக்தியோடும் எழுச்சியோடும் கொண்டாடப்படும் ஒரு உன்னதமான திருவிழாவாகும். தமிழ் மாதங்களில் தை மாதத்தில் வரும் பூச நட்சத்திரம் வரும் நன்னாளே தைப்பூசமாகப் போற்றப்படுகிறது.

இந்த நாள் முருகப்பெருமானுக்கு உகந்த நாளாகக் கருதப்படுவதற்குப் பின்னால் ஆழ்ந்த ஆன்மீகக் காரணங்களும், புராணப் பின்னணிகளும் உள்ளன. தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டும் அறப்போராட்டத்தின் அடையாளமாகத் தைப்பூசம் திகழ்கிறது.

முருகப்பெருமான் சூரபத்மனை அழிப்பதற்காகத் தனது தாயார் பார்வதி தேவியிடம் இருந்து "ஞானவேல்" பெற்ற நாளையே நாம் தைப்பூசமாகப் கொண்டாடுகிறோம். இந்த வேல் என்பது வெறும் ஆயுதம் மட்டுமல்ல, அது அறியாமை என்னும் இருளை அகற்றி ஞானம் என்னும் ஒளியை வழங்கும் அறிவின் குறியீடாகும்.

தைப் பூசத்தன்று சந்திரன் தனது முழுப் பொலிவுடன் பூச நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது, பூமியில் தெய்வீக ஆற்றல் அதிகரிப்பதாக நம்பப்படுகிறது. இந்த நாளில் பக்தர்கள் மேற்கொள்ளும் விரதங்களும் வழிபாடுகளும் மனத்தூய்மையையும் உடல் வலிமையையும் அளிக்கின்றன.

தைப்பூசத் திருவிழாவின் மிக முக்கியமான அம்சம் “காவடி“ எடுத்தல் ஆகும். தனது தவறை உணர்ந்த இடும்பன், சிவகிரி மற்றும் சக்திகிரி ஆகிய இரு மலைகளையும் ஒரு தடியின் இருபுறமும் கட்டித் தூக்கி வந்ததே காவடியின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் பக்தர்களாகிய நாமும் நமது கவலைகள் மற்றும் கர்ம வினைகளைச் சுமந்து முருகனிடம் ஒப்படைப்பதாக ஐதீகம். பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி எனப் பல வகைகள் இருந்தாலும், அவை அனைத்தும் இறைவனிடம் சரணடைவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. சிலர் “அலகு குத்துதல்“ மூலம் தங்களின் புலன்களை அடக்கி, வலியையும் தாண்டி இறைச் சிந்தனையில் திளைப்பதைக் காண முடிகிறது.



இது பக்தியின் உச்சகட்டமாகவும், உடலையும் மனதையும் இறைவனுக்காக அர்ப்பணிக்கும் செயலாகவும் பார்க்கப்படுகிறது.

தமிழகத்தில் அறுபடை வீடுகளிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும், பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் விழா உலகப் புகழ் பெற்றது. பாதயாத்திரையாகப் பல நூறு மைல்கள் நடந்து வரும் பக்தர்கள், “அரோகரா“ முழக்கமிட்டு முருகனைத் தரிசிப்பது சிலிர்ப்பூட்டும்

காட்சியாகும். தமிழ்நாட்டைத் தாண்டி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தைப்பூசம் ஒரு முக்கிய விழாவாகவே கொண்டாடப்படுகிறது. குறிப்பாக மலேசியாவின் பத்துமலை முருகனுக்கு நடைபெறும் தைப்பூச விழா, அங்குள்ள தமிழர்களின் கலாச்சார அடையாளமாக மாறியுள்ளது. இது தமிழினத்தின் ஒற்றுமையையும், பக்தி நெறியையும் உலகிற்குப் பறைசாற்றும் ஒரு நிகழ்வாக அமைகிறது. முருகப்பெருமான் தமிழ்க் கடவுள் என்பதால், தைப்பூசம் என்பது வெறும் மதச் சடங்காக மட்டுமன்றி, தமிழ் மொழியையும் பண்பாட்டையும் போற்றும் விழாவாகவும் திகழ்கிறது.

ஆன்மீக ரீதியாக மட்டுமன்றி, இயற்கை மற்றும் அறிவியல் ரீதியாகவும் தைப்பூசத்திற்குப் பல சிறப்புகள் உண்டு. தை மாதத்தில் சூரியன் உத்ராயண காலத்தில் (வடக்கு நோக்கிய பயணம்) நுழைகிறான். இது தேவர்களுக்குப் பகல் பொழுதாகும். இந்த நேரத்தில் மன ஒருமைப்பாட்டுடன் செய்யப்படும் தியானமும்





வழிபாடும் பன்மடங்கு பலனைத் தரும் என்பது சித்தர்களின் வாக்கு. வடலூர் ராமலிங்க அடிகளார் (வள்ளலார்) தைப்பூசத் திருநாளில் தான் “ஜோதி வழிபாடு“ எனும் தத்துவத்தை உலகுக்கு அளித்தார். பசியினால் வாடும் மக்களுக்கு அன்னதானம் வழங்குவதே உண்மையான வழிபாடு என்பதை உணர்த்திய அவர், சத்திய ஞான சபையில் தைப்பூசத்தன்று ஏழு திரைகளை விலக்கிச் சோதி தரிசனத்தைக் காட்டினார். “வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்“ என்று பாடிய வள்ளலார் காட்டிய அந்தப் பெருநெறி, தைப்பூசத்தின் மற்றொரு உன்னதப் பரிமாணமான “ஜீவகாருண்யத்தை“ நமக்கு நினைவூட்டுகிறது.

தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து புனித நீராடி, நெற்றியில் திருநீறு அணிந்து, முருகப்பெருமானின் துதிகளைப் பாடுவது மனதிற்கு அமைதியைத் தரும். கந்த ச்‘டி கவசம், திருப்புகழ் போன்ற பாடல்கள் பக்தர்களின் இல்லங்களில் ஒலிக்கும் போது அந்த இடமே ஒரு தெய்வீக அதிர்வைப் பெறுகிறது. தீய எண்ணங்கள் அழியவும், நற்பண்புகள் வளரவும் முருகனின் ஞானவேல் நமக்குத் துணை நிற்கிறது. அறுசுவை உணவுகளைத் தவிர்த்து, ஒருவேளை உணவருந்தி அல்லது பால் பழம் மட்டும் உட்கொண்டு விரதமிருப்பது உடலைச் சுத்திகரிக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், தைப்பூசம் என்பது வெற்றியின் திருவிழா. இருளை நீக்கி ஒளியைக் கொண்டுவரும் திருவிழா. அறியாமையை அகற்றி அறிவைப் புகட்டும் திருவிழா. “வேல் உண்டு வினை இல்லை, மயில் உண்டு பயம் இல்லை“ என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் விதைக்கும் ஒரு மகத்தான நாளாக இது அமைகிறது. சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒன்றுகூடி முருகனை வழிபடுவதன் மூலம் சமூக நல்லிணக்கமும் மேம்படுகிறது. மன உறுதி, தெளிந்த அறிவு மற்றும் கருணை உள்ளம் ஆகிய மூன்றையும் ஒருங்கே பெறத் தைப்பூசத் திருநாள் ஒரு நல்வாய்ப்பாகும். இந்தத் திருநாளில் முருகப்பெருமானின் பாதங்களை வணங்கி, அவன் அருளிய ஞானவேலின் துணையோடு வாழ்வின் சவால்களை வென்று, அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வைப் பெறுவோம். முருகனின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

**வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா!**

# மயிலிட்டி சிவபூமி கந்தபுராண ஆச்சரியத்தில் கந்தபுராணப் படிப்பு பக்தி பூர்வமாக நடைபெற்றது





மயிலிட்டி சிவபூமி கந்தபுராண ஆச்சிரமத்தில் கந்தபுராணப்படிப்பு நிகழ்வு மிகுந்த பக்திப் பெருக்குடன் நடைபெற்றது. இந்த ஆன்மீக நிகழ்வில் மயிலிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வின் இறுதி நாளன்று முருகப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் விசேட வழிபாடுகளும் பக்திபூர்வமாக இடம்பெற்றன.

இதன்போது கந்தபுராணத்தைப் பக்திச் சுவையுடன் பாராயணம் செய்த ஓதுவார் பெருமக்களின் ஆன்மீகப் பணியைப் பாராட்டி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர். விழாவின் நிறைவாகக் கலந்துகொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு அருள் பிரசாதங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.







இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(தை-2026) ISBN-978-955-7420-00-4